# “மலையக நாடகங்களின் தற்கால போக்கு”:பலாங்கொடை பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஆய்வு

**Rajkumar Lavanya**
South Eastrean University of Srilanka
rlavanyat14@gmai.com

**ஆய்வு சுருக்கம்:**

முத்தமிழில் ஒன்றாக போற்றப்படும் தமிழ்நாடகத்துறையானது, வேறெந்த கலைத்துறையும் புலப்படுத்த முடியாத சிந்தனைகளை சிறப்பாக வெளிக்காட்டும் ஒரு கலை வடிவமாகும். இதன் வளர்ச்சியின் ஒரு பாகமாக மலையக நாடகங்கள் விளங்குகின்றன. தென்னிந்தியாவில் இருந்து தோட்டதொழில்களுக்காக அங்குள்ள மக்கள் இங்கு அழைத்து வரப்பட்டபோது அவர்களுடனே வந்தவைகளுள் இக்கலைவடிவமும் ஒன்றாகும். ஆரம்பத்தில் பாரம்பரிய கூத்துக்களையும் இதிகாச, புராண காவியங்களையும் மாத்திரம் வெளிப்படுத்திய இம்மலையக நாடகங்கள் பிற்பட்ட காலங்களில் அறிவியல் சிந்தனை வளர்ச்சியின் நிமித்தம் பல்வேறு பரிணாமங்களை கண்டு, 1980 காலப்பகுதிகள் பாரிய வளர்ச்சி கண்டது. அக்காலப்பகுதிகளில் பாரம்பரிய நாடகங்கள் மாத்திரமின்றி, பல சமூகச்சீர்திருத்த நாடகங்களும் காணப்பட்டன. இது தவிர வீதி மற்றும் மேடை நாடகங்களும் அரங்கேறின. பண்பாட்டு கலாச்சார அம்சங்களை பிரதிபலிக்கும் நாடகங்களாக மாத்திரம் காணப்பட்ட இவை, பிற்பட்ட காலங்களில் சமூக நோக்குடன் அரங்கேறின. இருப்பினும் இருபத்தியோராம் நூற்றாண்டான இக்காலப்பகுதியில் தொழிநுட்பத்தினதும் அறிவியலினதும் வளர்ச்சியினால் இந்நிலைமை மாற்றமடைந்துள்ளது. பாரம்பரிய நாடகங்கள் முற்றாக அழிந்து விடும் நிலையை எட்டியுள்ள அதேவேளை ஏனைய நாடகங்களும் அருகிக் கொண்டே வருவதனை சுட்டிக்காட்டுவதோடு, காப்பாற்றப்பட வேண்டிய கட்டாயத்தில் காணப்படும் இம்மலையக நாடகங்களை பேணிப்பாதுகாப்பது எவ்வாறு என்பதை நோக்கமாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாய்விற்கு முதலாம் நிலைத்தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக கலந்துரையால், களஆய்வு, போன்றனவும் இரண்டாம் நிலைத்தரவுகளாக இது தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையப்பக்ககங்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு மலையக நாடகங்கள் அழிந்துவிடாமல் பாதுகாப்பது அனைவரதும் கடமை என்பதை முடிவாகக் கொண்டே இவ்வாய்வு அமைகிறது.

***பிரதான சொற்பதங்கள்:*** மலையகம், நாடகத்துறை, கூத்து, கலை

## ஆய்வு அறிமுகம்

ஆயக்கலை அறுபத்து நான்கிலும் தனக்கென ஒரு சிறப்பான இடத்தை பிடித்திருக்கும் கலை வடிவம் நாடகம். முத்தமிழில் ஒன்றாக போற்றப்படும் இந்நாடகம் வேறெந்த இலக்கியத்துறையோ, கலைத்துறையோ புலப்படுத்தாத சிந்தனைகளை நிதர்சனமாக வெளிக்காட்டும் திறன் கொண்டதாகும். அதனாலேயே அதன் ஓர் அம்சமான சினிமாத்துறை கலைத்துறையில் முதலிடம் பெற்றுள்ளது எனலாம். ஈழத்தை பெறுத்தவரையில் நாடகத்துறையானது பல்வேறு காலகட்டத்தில் பல்வேறு பரிமாணங்களைக் கண்டுள்ளது. இவ்வளர்ச்சியில் மலையக நாடகங்களுக்கு பாரிய பங்குண்டு என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

மலையக நாடகங்களானது தென்னிந்தியாவில் இருந்து தோட்டதொழில்களுக்கென அங்குள்ள மக்கள் இங்கு அழைத்து வரப்பட்டபோதே அவர்களுடனேயே வந்தது எனலாம். ஆரம்பத்தில் கடல்கடந்து தன் உறவுகளை விட்டு வந்தவர்கள் இரவு நேரங்களில் மனஆறுதலுக்காக ஆடற்கலைகளில் ஈடுபடுவர். பிற்பட்ட காலங்களில் அவை அழகியல் சார்ந்ததாகவும் சமயம் சார்ந்ததாகவும்

அமைந்தன. திருவிழாக்களில் பாரம்பரிய கலைகளான காமன்கூத்து, பொன்னர் சங்கர்கூத்து, அருச்சுனன் தபசு, கோவலன்கூத்து போன்றவற்றோடு இராமாயணம், மகாபாரம், குணசுந்தரி, வள்ளித்திருமணம் போன்ற நாடகங்களையும் நடத்தினர்.

ஆரம்பத்தில் பொழுதுபோக்குக்காவும் சமயம் சார்பானதாகவும் அமைந்திருந்த இந்நாடகங்களை 1930 முற்பட்ட காலங்களில் யாழ்பபாணக் கலைஞர்களுடன் இந்திய கலைஞர்கள் இணைந்து மலையகத்தில் நாடகம் போடும் முயற்சிகளில் இறங்கினர். 1950 காலகட்டத்தில் மலையக நாடகங்கள் சமூக சீர்திருத்த நாடகங்கள் எனும் ஓர் புதிய பரிணாமத்தை கண்டது. இதன் பிற்பட்ட காலங்களில் சமூக நோக்குடைய பல பகுத்தறிவான நாடகங்கள் தனக்கானதொரு தனி இடத்தை பிடித்துக்கொண்டது. பல இடங்களில் சபாக்கள் அமைக்கப்பட்டு புதிய புதிய தொனியில் நாடகங்கள் மேடையேறியது. 1965 க்குப் பிற்பட்ட காலப்பகுதியில் சிறிமா சாஸ்திரி ஒப்பந்ததினால் பலர் சிதறி போக மூத்த கலைஞர்கள் தாய்நாடு சென்றனர். இதில் எஞ்சியோர்களே தொழில்முறை நாடக கலைஞர்களாக மாறினர். இதனை தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் பல மேடை நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. இருபதாம் நூற்றாண்டுகளில் பல்வேறான நாடக சபாக்கள் மலையகத்தில் மட்டுமன்றி நாடு பூராகவும் தம் நாடகங்களை அரங்கேற்றியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவை மலையகத்தில் காணப்பட்ட தோட்ட துரைமார்களின் அட்டூழியம்.கங்காணிகளின் கொடுமை, உழைப்புக்கேற்ற ஊதியமின்மை, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற பல்வேறு பிரச்சினைகளை பலரிடத்தில் கொண்டு சேர்த்த அதேவேளை அது தொடர்பான விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தியது. இத்தன்மை பிற்பட்ட காலங்களிலும் தொடர்ந்து செல்வாக்கு பெற்ற வண்ணமே காணப்பட்டது. ஆனால் இருபத்தியோராம் நூற்றாண்டான இக்காலப்பகுதியில் இத்தன்மை மருவி வருகின்றமை கவலைக்கிடமான விடயமாகும். குறிப்பாக தற்காலத்தில் பாரம்பரிய நாடகங்கள் படிப்படியாக அருகி கொண்டே வருகின்றது.

இன்று வளர்ந்து நிற்கும் தொழிநுட்பத்தினதும் அறிவியலினதும் பல்வேறு பரிமாணமானது வாழ்ந்த கலைகளின நினைவுகளையும் வாழும் கலையின் பிரதிபலிப்புகளையும் அழித்துகொண்டே வருகின்றது. குறிப்பாக பாரம்பரிய கலையின் ஓர் சாரமான மலையக நாடகங்கள் தன் தனித்துவத்தை இழந்துகொண்டே வருகின்றது. இன்று அது அடியோடு அழியும் நிலையையும் எட்டிவிட்டது என்றால் அது கூடத் தவறில்லை.

இன்று மலையகத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிரு நாடகச்சபாக்களைத் தவிர ஏனையவை என்ன ஆனது ?என்பதே கேள்விக்குரிய அம்சமாக காணப்படுகிறது. பாரம்பரிய கலைகளில் காமன்கூத்து, பொன்னர் சங்கர்கூத்து ஆகிய கூத்துக்களை தவிர ஏனையவை அடியோடு அழிந்து விட்டன. அக்கூத்துக்களும் கூட குறித்த சில இடங்களில் மட்டுமே வாழ்கின்றது. இருப்பினும் அவையும் இன்று வழக்கொழிந்து அழியும் நிலையை எட்டியுள்ளமை கவலைக்கிடமான விடயமாகும். இதற்கு பிரதான காரணங்களாக அமைவன,

- மலையக பாடசாலைகளில் அதனை கற்பிப்பதற்குரிய முறையாக பயிற்றுவிக்கப்பட்டஆசிரியர்கள் இல்லாமை.
- ஈழத்தை பொறுத்தவரையில் தமிழ் நாடகத்துறைக்கான தொழில் வாய்ப்புக்கள் குறைவாக உள்ளமை.
- முத்த தலைமுறையினர் பாரம்பரிய கலைகளை அடுத்த தலைமுறையினருக்கு பயிற்றுவிக்காமை.
- அரசு பக்கச்சார்புடன் செயற்படுகின்றமை.
  (கண்டி பெரஹெராவுக்கு கொடுக்கப்படும் சலுகை மலையக கூத்துக்களுக்கு கிடைக்காமை)
- மலையக நாடகச்சபாக்களுக்கு போதியளவு ஊக்குவிப்பின்மை.
- அரங்கேற்றப்பட்ட மலையக நாடகங்கள் ஆவண வடிவில் இல்லாமை.

- சமூகத்தில் மதிப்பு நோக்கம் கருதி கற்காமை.

இவ்வாறான பிரச்சினைகளை கலைவதனூடாக வழக்கொழிந்த மலைய நாடகத்துறையினை மீட்டுருவாக்கம் செய்யலாம். அத்தோடு அதனை உயிர்பித்து இளைய தலைமுறையிடம் ஒப்படைப்பதன் மூலம் மலையக நாடகத்துறை அழியாமல் பாதுகாக்கவும் முடியும். எனவே வளர்ந்து நிற்கும் தொழிநுட்ப உலகத்தில் அழியும் இவ்வாறான நமது தமிழ் கலைகளை பேணிப்பாதுகாப்பது எம் ஒவ்வொருவரது கடமையாகும்.மலையக நாடகங்களை பொறுத்தவரையில் அதனை அழியாது பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றால் அது மிகையாகாது.

**ஆய்வு முறையியல்**

இது பண்புசார் மற்றும் அளவுசார் ஆய்வாகும். இவ்வாய்விற்கு முதலாம் நிலைத்தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக கலந்துரையால், களதரவுதிரட்டு போன்றனவும் இரண்டாம் நிலைத்தரவுகளாக இது தொடர்பாக வெளிவந்த நூல்கள், கட்டுரைகள், ஆய்வுக்கோவைகள், சஞ்சிகைகள், இணையப்பக்ககங்கள் என்பனவும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

களத்தரவுதிரட்டு , கலந்துரையால்

- பலாங்கொடையில் உள்ள வலயபொட, மாரதென்ன, விக்கிலிய, றை, மெந்தகன்த போன்ற பிரதேசங்களுக்கு சென்று அப்பிரதேசங்களில் நடந்தேறிய நாடகம் தொடர்பாகவும் அங்கு நடக்கும் கூத்துக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடி தகவல்கள் சேகரிக்கப்பட்டது.
- பலாங்கொடை இந்து கல்லூரியில் 2017 இல் க.பொ.த (ச/த) பரீட்சையில் தேற்ற இருக்கும் 75 மாணவர்களில் 15 மாணவர்களை எழுமாறாக எடுத்து அவர்களிடம் நாடகங்கள் பற்றியும் கூத்துக்கள் பற்றியும் வினாக்கள் தொடுக்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டது.

**ஆய்வு நோக்கம்**

- **பிரதான நோக்கம்**

  ஈழத்து நாடகத்துறை வளர்ச்சியில் தனக்கென ஓர் இடத்தை பிடித்த மலையக நாடகங்கள், இன்று அருகி வருகின்றமை குறித்த விழிப்புணர்வை கலையுலகுக்கு அறியச்செய்தல்.

- **உப நோக்கங்கள்**
  - மலையகத்தில் வழக்கிழந்து கொண்டிருக்கும் நாடகத்துறையை மீட்டுருவாக்கம் செய்து, இளைய தலைமுறையிடம் கையளித்தல்.
  - மலையக நாடகங்களின் சிறப்பினை வெளிக்கொணர்தல்.
  - மக்கள் மத்தியில் அது குறித்த ஆர்வத்தினை தூண்டுதல்.
  - வழக்கிழந்து வரும் பாரம்பரிய கூத்துக்களுக்கு புத்துயிர் அளித்து மக்கள் மத்தியில் அதன் செல்வாக்கை அதிகரித்தல்.
  - மலையகத்தில் காணப்பட்ட நாடக சபாக்களை வெளிக்கொணர்தல்.
  - மலையக நாடகங்களின் செல்நெறி குறித்து ஆராய்தல்.

**ஆய்வு முக்கியத்துவம்**

ஒவ்வொரு மனித வாழ்விலும் தமக்கென வாழும் கலையானது அம்மனித சமுதாயத்தின் தனித்துவத்தை பிரதிபலிப்பதாக மட்டுமன்றி பண்பாட்டு கலாசார அம்சங்ளை வெளிக்காட்டுவதாகவும் அமைகின்றது. இக்கலைகள் வெறுமனே ஒரு பொழுதுபோக்கு அம்சமல்ல. மலையக நாடகங்களை பொறுத்தவரையில் ,அது கலை அம்சங்களை மட்டுமன்றி மனித உணர்வுகளை வெளிக்காட்டும் திறன் கொண்டதாகவும் காணப்படுகிறது. அத்தன்மை வாய்ந்த மலையக நாடகத்துறையானது ஒரு சாகாப்தம் காணாது அழியும் நிலையை எட்டியுள்ளமை கவலைக்கிடமான விடயமாகும். குறிப்பாக விழாக்களில் கூத்துக்களின் வகிப்பாகம் படிப்படியாக குறைந்துக்கொண்டே வருகின்றது. எனவே மலையக நாடகங்கள் அழியாது பேணப்பாதுகாத்தல் அனைவரது கடமையாகும்.

**ஆய்வு பிரச்சினை**

ஒவ்வொரு சமுதாயத்தினதும் பண்பாட்டு கலாச்சார அம்சங்களை பிரதிபலிக்கும் பாரிய பங்கு கலைகளுக்கு உண்டு. அவற்றில் ஒரு கூறான மலையக நாடகங்களானது இன்று வேரோடு அழியும் நிலையை எட்டியுள்ளது. மக்கள் மத்தியில் மட்டுமன்றி அதனை பேணிப்பாதுகாக்கும் பொறுப்புள்ள இளைஞர்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் இதற்கான பொறுப்புணர்வும் ஆர்வமும் குறைந்துகொண்டே வருகின்றது.

மேலும் இந்நிலையில் இருந்து மீள இலங்கை அரசு பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் எனும் கற்கைநெறியையும் விருப்பத்துக்குரிய பாடமாக சேர்த்துக் கொண்டுள்ள அதே வேளை அதற்கான ஒரு பல்கலைக்கழகத்தையும் உருவாக்கியுள்ளது. எனினும் மலையகத்தை பொறுத்தவரையில் இன்று அதனை தெரிவு செய்து கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 5% வீதமாகவே காணப்படுகின்றது. குறிப்பாக மலையக நாடகங்கள் இன்று அடியோடு அழியும் நிலையை எட்டியுள்ளது. இவற்றுக்கான காரணங்கள் எவை? என்பதை ஆய்வு பிரச்சினையாக கொண்டு ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

**பெறுபேறுகள்**

மேற்காட்டப்பட்ட ஆய்வுப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து பின்வரும் பெறுபேறுகளை பெற முடிந்தது.

- ✓ ஆய்வு பிரதேசத்திற்குட்பட்ட கலை ஆர்வளர்களுக்கு போதியளவு ஊக்குவிப்பின்மை.
- ✓ வலயபொட, றை, மெந்தகன்த போன்ற பிரதேசங்களில் காமன்கூத்தானது தற்போது இடைநிறுத்தப் பட்டுள்ளமை.
- ✓ நாடகங்களை மேடைபோட்டு காட்டும் திறமையாளர்களுக்கு மதிப்பின்மை. அவர்கள் சமூகத்தில் மதிக்கப்படாமை. உ-ம்: கூத்தாடி போன்ற சொற்களை அவர்களது பெயர்களாக பயன்படத்தல்.
- ✓ பாடசாலையில் மாணவர்களுக்கு நாடகமும் அரங்கியலும் எனும் பாடநெறியை விருப்பத்துக்குரிய பாடமாக இடாமை.
- ✓ நாடகம் சம்பந்தமாக தமிழ்மொழி தினப்போட்டிகளிலும் வேறு பல போட்டிகளில் பங்கெடுக்க மாணவர்களை ஆர்வமூட்டாமை.
- ✓ கற்பிப்பதற்குரிய பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் இல்லாமை.

- ✓ கூத்துக்களை கற்று அதனை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல இளம் தலைமுறையினர் முன்வராமை.
- ✓ தொழில் வாய்ப்புக்கள் குறைவாக காணப்படுகின்றமை.
- ✓ மக்கள் மேடை நாடகங்களை விட சினிமாவுக்கு அதிக ஆர்வமும் முக்கியத்துவமும் கொடுக்கின்றமை.

**முடிவுரை**

மலையக நாடங்கள் நாளடைவில் அழியும் நிலையை எட்டியுள்ளது. ஒரு கலை அழிவது என்பது ஒரு இனம் அழிவதற்கு சமன் என்றே கூறலாம். இந்நாடகங்களை பொறுத்தவரையில் மலையகத்தில் அதற்கான செல்வாக்கு குறைந்து கொண்டே வருகின்றது. அதற்கு பிரதான காரணமாக அமைவது, இந்தியா போன்ற நாடுகளில் காணப்படும் கலைத்துறை சார்ந்த வளங்களுடன் கூடிய ஊக்குவிப்பு இங்கு காணப்படாமையேயாகும். அதுமட்டுமன்றி கலை ஆர்வளர்களை ஊக்குவித்து சன்மானங்களை வழங்கப்படாமையுமாகும். மேலும் ஏனைய கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் அளவிற்கு நாடகத்துறைக்கு வழங்கப்படுவதில்லை. காலம் காலமாக பேணப்பாதுகாக்க வேண்டி மலையக நாடகங்கள் இன்று வலுவிழந்து அழியும் நிலையை எட்டியுள்ளது. அதனை கட்டிக்காக்கும் பொறுபபுள்ள இளம் தலைமுறையினர் பொறுப்புணர்வற்று செயல்படுகின்றமையும் அவற்றை அதனை கற்றுக் கொடுக்கவேண்டிய பொறுப்புள்ள மூத்தோர்கள் கவனத்திற்கொள்ளாமையும் போன்ற காரணங்கள் மலையக நாடகங்கள் அருகி வருகின்றமைக்கான முக்கிய காரணங்களாக அடையாப்படுத்தப்படுகின்றன.

அதனை எனவே இவற்றை பேணிப்பாதுகாக்க,

- ✓ கலைகளை ஒரு கட்டாய பாடமாக அரசு அறிவித்தல் வேண்டும்.
- ✓ மலையக நாடகங்கள் தொடர்பாக அடிக்கடி போட்டிகளை நடாத்தி அதற்குரிய பெறுமதியான சன்மானங்ளை வழங்குவதோடு பாராட்டு விழாக்களை நடாத்தல் வேண்டும்.
- ✓ தற்காலத்தில் பாரம்பரிய கலைகளை அறிந்திருக்கும் மூத்த தலைமுறையினருக்கு ஊக்குவிக்குப்புகள் வழங்கப்பட வேண்டும்.
- ✓ இது தொடர்பான தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் வேண்டும்.
- ✓ மலையக நாடங்களை கட்டிக்காக்கும் பொறுப்புள்ளவர்களாக நாளைய தலைமுறையினர் மாற வேண்டும்.
- ✓ இதற்கான வளங்களுடன் கூடிய ஊக்குவிப்புக்களை அரச அங்கிகாரத்துடன் வழங்க வேண்டும்.

இவ்வாறான செயற்பாடகளை மேற்கொள்வதன் மூலம் மலையக நாடகத்துறை அழியாமல் பாதுகாக்க முடியும். எனவே ‘‘மலையக நாடகங்களின் தற்கால போக்கு’’ எனும் தலைப்பின் கீழ் தற்கால நிலை குறித்தும், அவை அருகி வருவதற்கான காரணங்கள், அதனை பேணிப் பாதுகாக்க எவ்வாறான உத்திகளை கையாள முடியும் போன்ற அம்சங்களை காணக்கூடியதாய் உள்ளது. ஆகவே

ஈழத்து கலைதுறையின் ஓர் பாகமான மலையக நாடகங்களை அழிந்து விடாமல் காப்பது எம் ஒவ்வொருவரது கடமையாகும்.

**உசாத்துணைகள்**


1. அந்தனி ஜீவா, (1981), ஈழத்தில் தமிழ் நாடகம், அகரம் வெளியீடு, சிவகங்கை.
2. சாரல் நாடன், (2014), மலையக தமிழ் இலக்கிய முயற்சிகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை